ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2039/31 - 2017 ඔක්තෝබර් මස 06 වැනි සිකුරාදා - 2017.10.06

*2039/31 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி.7/2001*

**1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்**

*1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.*

திலக் மாரப்பன,
வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2017, ஒற்றோபர் 04.*

ஒழுங்கு விதிகள்

*1.* இவ்வொழுங்கு விதிகள் 2017 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சபை (அணு, இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களின் பரம்புதல் தொடர்பான தடைவிதிப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகள் எனஎடுத்துக்காட்டப்படலாம்.

*2.* அணு, இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களின் பரம்புதலைத் தடுப்பதற்கான பரந்தளவிலான தேவைப்பாடுகளை எடுத்துக் கூறுகின்ற ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1540 (2004), மற்றும் 1673 (2006), 1810 (2008), 1977 (2011), 2055 (2012) மற்றும் 2325 (2016) என்பனவுட்பட்ட அடுத்துப் பின்னரான தீர்மானங்களினாலும் வேறேதேனும் அடுத்துப்பின்னரான தீர்மானத்தினாலும் செய்யப்பட்ட அத்தீர்மானத்தின் திரிபுபடுத்துகைகளும் வலுப்படுத்துகையும், ஏதேனும் உறுப்பு நாட்டின் சட்டமுறையான அதிகாரமின்றிச் செயலாற்றுகின்ற எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆள், தொகுதியினர் அல்லது உருவகம், அணு, இரசாயன அல்லது உயிரியல் ஆயுதங்களை உற்பத்தி செய்தல், கொள்ளுதல், உடைமையில் வைத்திருத்தல், அபிவிருத்தி செய்தல், இடம்பெயர்த்தல், கைமாற்றுதல் அல்லது பயன்படுத்துதலையும் அவை வெளிச்செலுத்தப்படும் வழிவகைகளையும், மேற்போந்த செயற்பாடுகளுள் எவற்றிலும் ஈடுபடுவதற்கான எத்தணிப்புகளையும், உடந்தையாள் ஒருவராக அவற்றில் பங்குபற்றுவதனையும், அவற்றுக்கு உதவியளித்தலையும் அல்லது நிதியளித்தலையும் தடைசெய்வதற்குத் தோதான சட்டவழிமுறைகளை எடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளின் மீது தொடர்ச்சியான கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. மேலும், தொடர்புபட்ட பொருட்கள் மீது

தோதான கட்டுப்பாடுகளை நிலைநாட்டுவதன் மூலம் உட்பட, இவ்வாயுதங்களின் பரம்புதலையும் அவை வெளிச்செலுத்தப்படும் வழிவகைகளையும் தடுப்பதற்கு உள்நாட்டுக் கட்டுப்பாடுகளை நிலைநாட்டுவதற்கு உறுப்புநாடுகள் தேவைப்படுத்தப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபைப் பட்டயத்தின் VII ஆம் அத்தியாயத்தின்கீழ் செயலாற்றுகின்ற ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவை, 2004 ஏப்பிறல் 28 ஆந் தேதியன்று தீர்மானம் 1540 (2004) என்பதை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

3. (1) இலங்கையினுள் அணு, இரசாயன அல்லது உயிரியல் ஆயுதங்களையும் அவை வெளிச் செலுத்தப்படும் வழிவகைகளையும் உற்பத்தி செய்கின்ற, கொள்ளுகின்ற, உடைமை கொள்கின்ற, அபிவிருத்தி செய்கின்ற, இடம்பெயர்க்கின்ற, கைமாற்றுகின்ற அல்லது பயன்படுத்துகின்ற எவரேனுமாள் அல்லது தொகுதியினர் அல்லது உருவகம் இவ்வொழுங்கு விதிகளின் கீழான தவறொன்றைப் புரிகின்றார், புரிகின்றனர் அல்லது புரிகின்றது என்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபதாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) உடந்தையாளொருவராக அணு, இரசாயன அல்லது உயிரியல் ஆயுதங்களையும் அவை வெளிச் செலுத்தப்படும் வழிவகைகளையும் உற்பத்தி செய்வதில், கொள்ளுவதில், அபிவிருத்தி செய்வதில், உடைமையில் வைத்திருப்பதில், இடம்பெயர்ப்பதில், கைமாற்றுவதில் அல்லது பயன்படுத்துவதில் பங்குபற்றுகின்ற அல்லது உதவுகின்ற அல்லது நிதியளிக்கின்ற எவரேனுமாள் அல்லது தொகுதியினர் அல்லது உருவகம் தவறொன்றைப் புரிகின்றார், புரிகின்றனர் அல்லது புரிகின்றது என்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஒருமில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

4. (1) அணு, இரசாயன அல்லது உயிரியல் ஆயுதங்களையும் அவைவெளிச் செலுத்தப்படும் வழிவகைகளையும் உற்பத்தி செய்வதற்கு, கொள்ளுவதற்கு, அபிவிருத்தி செய்வதற்கு, உடைமை கொள்வதற்கு, இடம்பெயர்ப்பதற்கு, கைமாற்றுவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு அல்லது அணு, இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள் தொடர்பான பொருட்களின் பரம்புதல் நோக்கங்களுக்காக ஓர் ஆளுக்கு, தொகுதியினருக்கு அல்லது உருவகத்துக்கு அல்லது அவரின், அவர்களின் அல்லது அதன் நன்மைக்காக ஆளொருவர் எவையேனும் நிதிகளை, வேறு நிதிசார் சொத்துக்களை மற்றும் பொருளாதார வளங்களை அத்துடன் நிதிசார் அல்லது வேறுதொடர்புபட்ட சேவைகளை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கிடைக்கக்கூடியனவாக்குதலாகாது.

(2) ஓராம் பந்தியை மீறுகின்ற எவரேனுமாள் அல்லது தொகுதியினர் அல்லது உருவகம் இவ்வொழுங்கு விதிகளின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

5. (1) சமாதான நோக்கங்களுக்காக அணு, இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களுடன் தொடர்புபட்ட பொருட்களைக் கையாளுகின்ற எவரேனுமாள், இயைபான எழுத்திலான சட்டத்திற்கிணங்க உற்பத்தி, பாவனை, களஞ்சியப்படுத்துகை மற்றும் இடம் பெயர்வு அத்துடன் குறைந்தபட்சப் பௌதீகப் பாதுகாப்பு வழிமுறைகளுக்கு இணங்கியொழுகுதலும் அவற்றைப் பேணுதலும் வேண்டும்.

(2) ஓராம் பந்தியை மீறுகின்ற எவரேனுமாள், தொகுதியினர் அல்லது உருவகம் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

6. (1) சமாதான நோக்கங்களுக்காக இலங்கையினுள் அணு, இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள் தொடர்பான பொருட்களை ஏற்றுமதி செய்வதில், அவற்றின் இடப்பெயர்வில், அவற்றைக் கப்பல் மாற்றியேற்றுவதில் அல்லது மீள் ஏற்றுமதி செய்வதில் ஈடுபடுகின்ற எவரேனுமாள் அல்லது தொகுதியினர் அல்லது உருவகம் இயைபான எழுத்திலான சட்டத்துக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியை மீறுகின்ற எவரேனுமாள் அல்லது தொகுதியினர் அல்லது உருவகம் இவ்வொழுங்கு விதிகளின் கீழான தவறொன்றைப் புரிகின்றார், புரிகின்றனர் அல்லது புரிகின்றது என்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

7. இவ்வொழுங்கு விதிகளின் நோக்கங்களுக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் இருத்தல் வேண்டும்; அவர், பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

8. (1) தகுதிவாய்ந்த அதிகாரி, ஏதேனும் நிறுவனம், நிதிசார் உளவறிதற் கூறு மற்றும் அமைச்சர், இவ்வொழுங்கு விதிகளின் ஏற்பாடுகளினது மீறுகைக்கு அல்லது நிகழ்தகு மீறுகைக்கு இயைபான ஏதேனும் கருமத்தை அல்லது தகவலைத் தோதான சட்டவலுவுறுத்தல் முகவராண்மைகளுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, சட்டவலுவுறுத்தல் முகவராண்மைகள், இயைபான நிறுவனங்கள், நிதிசார் உளவறிதற் கூறு மற்றும் வேறு தோதான முகவராண்மைகள் என்பவற்றைக் கலந்தாலோசித்து, இவ்வொழுங்கு விதிகளுக்கு இணங்கியொழுகுவதனையும் அவற்றை வலுவுறுத்துவதனையும் கண்காணிப்பதற்காக அமுலாக்கப்படவேண்டிய திட்டமொன்றை அபிவிருத்தி செய்தல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதிகளின் கீழ் செயல்முறைகளை அமுலாக்குவதற்காகவும் கடப்பாடுகளை வலுவுறுத்துவதற்காகவும் தகுதிவாய்ந்த அதிகாரி பணிப்புரைகளை வழங்கலாம்.

9. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக -

"உயிரியல் ஆயுதங்கள்" என்பது, ஒரு நுண்ணுயிரி அல்லது உயிரியல் போர்க் கருவியின் தொற்று அல்லது நச்சுத் தன்மைகளின் விளைவுகளினூடாக ஆட்களை, விலங்குகளை அல்லது தாவரங்களைக் கொல்வதற்கு, அவர்களுக்கு அல்லது அவற்றுக்குத் தீங்கு விளைவிப்பதற்கு அல்லது தொற்று ஏற்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட ஏதேனும் ஆயுதம் என்று பொருளாகும்;

"இரசாயன ஆயுதங்கள்" என்பது, -

(அ) இவ்வொழுங்கு விதிகளின்கீழ் தடைசெய்யப்படாத சமாதான நோக்கங்களுக்காக உட்கருதப்படுமிடத்துத் தவிர, வகைகளும் தொகைகளும் அத்தகைய நோக்கங்களுடன் ஒத்திருக்கின்ற அளவுவரை, நச்சுத்தன்மையினவான இரசாயனப் பொருட்களும் அவற்றின் முன்னோடிகளும்;

(ஆ) போர்க் கலன்களையும் உபாயங்களையும் பயன்படுத்துவதன் விளைவாக வெளியேற்றப்படுவனவும் (அ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட அந்த நச்சுத்தன்மையினவான இரசாயனப் பொருட்களினவுமான நச்சுத்தன்மைகளினூடாக இறப்பை அல்லது வேறு தீங்கை விளைவிப்பதற்குக் குறிப்பாக வடிவமைக்கப்பட்ட அத்தகைய போர்க்கலன்களும் உபாயங்களும்;

(இ) பந்தி (ஆ) வில் குறித்துரைக்கப்பட்ட போர்க்கலன்களையும் உபாயங்களையும் பயன்படுத்துதல் சம்பந்தமாக நேரடியாகப் பயன்படுத்தப்படுவதற்குக் குறிப்பாக வடிவமைக்கப்பட்ட ஏதேனும் சாதனம்,

என்று பொருளாகும்;

"உருவகம்" என்பது, ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழு, நம்பிக்கைப் பொறுப்பு, பங்காண்மை, நிதியம், கூட்டிணைக்கப்படாத கழகம் அல்லது ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"நிதிசார் உளவறிதற்கூறு" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிக் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறு என்று பொருளாகும்;

"மேல் நீதிமன்றம்" என்பது, அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட, கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்துக்கான மேல் நீதிமன்றம் என்று பொருளாகும்;

"வெளிச்செலுத்தப்படும் வழிவகைகள்" என்பது, அணு, இரசாயன அல்லது உயிரியல் ஆயுதங்களை வெளிச்செலுத்துவதற்கான ஆற்றலையுடையவையும் அத்தகைய பயன்பாட்டுக்காக விசேடமான முறையில் வடிவமைக்கப்படுகின்றவையுமான எறிகணைகள், ஏவுகணைகள் மற்றும் வேறு ஆளில்லா முறைமைகள் என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும்;

"அணு ஆயுதம்" என்பது, சுய தொடர்ச்சியைக் கொண்ட அணுக்கருப்பிளம்பிலிருந்து அத்துடன் / அல்லது அணுப்பிணைவிலிருந்து உடனடியாக வெளியேற்றப்பட்ட வலுவின் திடீர் வெளியேற்றுகையின் மூலம் வெடித்தலையும் பெருஞ்சேதத்தையும் பேரழிவையும் விளைவிக்கும் ஆற்றலையுடைய ஆயுத ஒன்று சேர்க்கை என்று பொருளாகும்;

"ஆள்" என்பது, (2 ஆம் அத்தியாயமான) பொருள்கோடற் கட்டளைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தொடர்புபட்ட பொருட்கள்" என்பது, அணு, இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களையும் அவற்றின் வெளிச்செலுத்தப்படும் வழிவகைகளையும் வடிவமைப்பதற்காக, அபிவிருத்தி செய்வதற்காக, தயாரிப்பதற்காக அல்லது பயன்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படக்கூடியவையும், இயைபான பல்புடைப் பொருத்தனைகளினாலும் ஒழுங்கேற்பாடுகளினாலும் மேவப்பட்டவையும் அல்லது தேசியக் கட்டுப்பாட்டு நிரல்களில் உள்ளடக்கப்பட்டவையுமான பொருட்கள், சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பவியல் என்று பொருளாகும்;

"கப்பல் மாற்றியேற்றுதல்" என்பது, இலங்கையின் துறைமுகங்களினூடாகக் கப்பலேற்றுதல் என்று பொருளாகும்.

*10-629*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.